வாக்குமூலம்

உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 136/2020

வழக்கு சாட்சி LW5 /PW2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாண்டியன் | ஜாதி | |
| கணவர்/தந்தை | ஜெகந்நாதன் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 40 |

தேதி 12.02.2025

எதிரி ஆஜர்.

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் லட்சுமிபுரம் பகுதியில் குடியிருந்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி கையொப்பமானது அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 23.10.2017 அன்று மதியம் 1.45 மணிக்கு சைக்கிள் ஷாப் நாகாத்தம்மன் கோயில் அருகே வழக்கு சம்மந்தமாக போலீசார் விசாரித்து கொண்டிருந்தார்கள். அப்போது அந்த இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் வரைந்தார்கள். என்னிடம் சாட்சி கையொப்பம் கேட்டார்கள். நானும் சாட்சியாக கையொப்பம் செய்து கொடுத்தேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நான் 23.10.2017 அன்று எங்கு சென்றேன் என்றால் நாகாத்தம்மன் கோயில் வழியாக சென்று கொண்டிருந்தேன். போலீசார் அங்கு இருந்தார்கள் என்றால் ஆமாம். என்ன சம்பவம் நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் ஆமாம். போலீசார் என்னை காவல் நிலையம் அழைத்தார்கள் என்றால் இல்லை. ரோட்டில்தான் கையொப்பம் வாங்கினார்கள். நான் கையொப்பம் செய்ததில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் ஆமாம். போலீசார் கேட்டுக்கொண்டதால் கையொப்பம் செய்தேன் என்றால் ஆமாம்.

**மறுவிசாரணை இல்லை.**